**O.S. No. : 97/2016**

Dated: 03.06.2026

**பி.வா.சா.1: சுப்பன் ; த/பெ. ஜோகி கவுடர்**

**<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி :</u>**

14. நான் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரை பத்தி–3–ல் 1928 ஆம் ஆண்டு எனது தாத்தா பெள்ளா கவுடர் கிரையம் பெற்ற 41 சென்ட் பூமியில் எனது தகப்பனார் ஜோகிக்கு 20 சென்ட்டும், எனது பெரியப்பா மாதன் என்பவருக்கு 20 சென்ட்டும் ஒதுக்கப்பட்டதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.1 மற்றும் பி.வா.சா.ஆ.2 ஆவணங்களில் ஏற்கனவே எனது தகப்பனாருக்கும், எனது பெரியப்பாவிற்கும் இடையில் பாகப்பிரிவினை ஏற்பட்டு அதில் ஒதுக்கப்பட்ட பூமி விற்பனை செய்யப்படுவதாக காண்பிக்கப்படவில்லை என்றால் அவ்வாறு காண்பிக்கப்படவில்லை, ஆனால் நஞ்சா கவுடர் அனுபவித்து வந்த பூமியை எனக்கு விற்பனை செய்ததாக காண்பிக்கப்பட்டுள்ளது.

15. அவ்வாறு நஞ்சா கவுடர் அனுபவித்து வந்த பூமியை எனக்கு விற்பனை செய்ததாக கூறும் நிலையில் நஞ்சா கவுடர் அந்த பூமியை அனுபவித்து வந்தார் என்பதை காண்பிக்க இந்த வழக்கில் ஆவணங்கள் ஏதாவது தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனது தாத்தா கிரையம் பெற்ற 41 சென்ட் பூமி ஒரே இடத்தில் உள்ள பூமி என்றால் சரியல்ல, அவை வெவ்வேறு இடங்களில் உள்ள பூமிகள் ஆகும். தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 எனது தாத்தா கிரையம் பெற்ற பத்திரத்தில் சொத்துக்கள் வெவ்வேறு இடத்தில் உள்ளதாக காண்பிக்கப்பட்டுள்ளதா என்றால் இல்லை.

16. எனது தகப்பனாருக்கு ஒதுக்கப்பட்டதாக சொல்லும் 20 சென்ட் பூமியும் ஒரே இடத்தில்தான் உள்ளது என்றால் சரியல்ல, வெவ்வேறு இடத்தில் உள்ளது. அது எத்தனை இடங்களில் உள்ளது என்றால் மூன்று இடங்களில் உள்ளது. நான் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் எனது தகப்பனாருக்கு ஒதுக்கப்பட்ட 20 சென்ட் பூமி மூன்று இடங்களில் உள்ளது

என்று கூறியுள்ளேனா என்றால் இல்லை.

17. தற்போது என்னிடம் காட்டப்படும் நான் நஞ்சா கவுடர் என்பவரிடமிருந்து 20 சென்ட் பூமியை கிரையம் பெற்றதற்கான பி.வா.சா.ஆ.2 கிரைய ஆவணத்தில் 20 சென்ட் பூமியும் ஒரே இடத்தில் இருப்பதாகத்தான் காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1 மற்றும் பி.வா.சா.ஆ.2 ஆவணங்கள் தாவா சொத்திற்கு தொடர்பில்லாத ஆவணங்கள் என்றால் சரியல்ல, தொடர்பு உள்ளது, இந்த தாவா சொத்து பொறுத்து நஞ்சா கவுடர் பெயரில் பட்டா உள்ளது. நான் நஞ்சா கவுடர் பெயரில் பட்டா உள்ளது என்று கூறும் நிலையில் அந்த ஆவணத்தை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் அவ்வாறு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யாமல் வழக்கிற்காக தாக்கல் செய்துள்ளதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

18. நான் எனது எதிர்வழக்குரையில் 2004 ஆம் ஆண்டு வாதி எனது இடத்தில் வீடு கட்ட வந்ததை நான் தடுத்ததாக கூறியுள்ள நிலையில் அவ்வாறு அந்த பூமி எனக்கு பாத்தியப்பட்ட பூமி என்பதை காண்பிக்க இந்த வழக்கில் ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் சர்வே எண் 270/6–ல் 7 ½ சென்ட் பூமி எனக்கு பாத்தியப்பட்டது என்பதை காண்பிக்க பட்டாவை தாக்கல் செய்துள்ளேன். நான் மேலே கூறியதுபோல இந்த வழக்கில் எந்தவித பட்டாவும் தாக்கல் செய்யாமல் பட்டா தாக்கல் செய்துள்ளதாக வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

19. நான் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் நான் கிரையம் பெற்ற பூமியில் வாதி குடும்ப ஏற்பாட்டின்படி வீடு கட்டியுள்ளார் என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். அவ்வாறு நான் எதிர்வழக்குரையில் கூறியுள்ள குடும்ப ஏற்பாட்டை காண்பிக்க ஏதாவது ஆவணங்கள் உள்ளதா என்றால் இல்லை. நான் எனது எதிர்வழக்குரையில் குடும்ப ஏற்பாடு வாய்மொழியாக ஏற்பட்டது என்றும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்,

எனது தகப்பனார் கேட்டதால் நான் கொடுத்தேன், குடும்ப ஏற்பாடு எதுவும் ஏற்படவில்லை.

20. நான் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் வாதி 3.25 சென்ட் பூமியில் வீடு கட்டியுள்ளார் என்றும், அதை ஈடு செய்ய குடும்ப சொத்தில் 3 சென்ட் பூமியை விடுதலை செய்துள்ளார் என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். அவ்வாறு வாதி 3 சென்ட் பூமியை விடுதலை செய்ததற்கு ஏதாவது ஆவணம் உள்ளதா என்றால் இல்லை. நான் எனது எதிர்வழக்குரையில் எனது குடும்ப சொத்துக்கள் தற்போதும் கூட்டு சுவாதீனத்தில்தான் இருந்து வருகிறது என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான், எனது தகப்பனாரின் சொத்துக்கள் இன்றும் கூட்டு சுவாதீனத்தில்தான் இருந்து வருகிறது.

21. எனது எதிர்வழக்குரையில் வாதி தனது வீட்டிற்கு அருகில் ஆழ்துளை குழாய் கிணறு அமைத்துள்ளதாக கூறியுள்ள நிலையில் வாதி அந்த பூமியில் ஆழ்துளை குழாய் கிணறு அமைத்துள்ளார் என்றால் சரிதான், ஆனால் வாதி அவரது வீட்டிற்கு பின்புறம் தள்ளி ஆழ்துளை குழாய் கிணறு அமைத்துள்ளார். அவ்வாறு வாதி ஆழ்துளை குழாய் கிணறு அமைத்துள்ள இடம் அவர் வீடு கட்டிய 3.25 சென்ட் போக மீதமுள்ள மூன்று சென்ட் இடத்தில்தான் என்றால் சரிதான்.

22. நான் எனது எதிர்வழக்குரையில் வாதி அனுமதியின்றி ஆழ்துளை குழாய் கிணறு அமைத்துள்ளதாக கூறியுள்ள நிலையில் வாதி வா.சா.ஆ.4 ஆவணத்தின் மூலம் பஞ்சாயத்தில் அனுமதி பெற்றுதான் ஆழ்துளை குழாய் கிணறு அமைத்துள்ளார் என்றால் சரியல்ல, வாதி பழைய சர்வே எண் 104–ல் ஆழ்துளை குழாய் கிணறு அமைக்க அனுமதி பெற்றுவிட்டு புதிய சர்வே எண் 270/6–ல் ஆழ்துளை குழாய் கிணறு அமைத்துள்ளார். பழைய சர்வே எண் 104–ற்கு இணையான புதிய சர்வே எண் 270/6 என்றால் சரியல்ல, பழைய சர்வே எண் 104–ற்கு இணையான புதிய சர்வே எண் 270 ஆகும், அதில் பல உட்பிரிவுகள் உள்ளது.

23. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.1 மற்றும் பி.வா.சா.ஆ.2 ஆவணங்களின்படி நான் கிரையம் பெற்றுள்ள சொத்து பழைய சர்வே எண் 104–ல்தான் அமைந்துள்ளது என்றால் சரிதான். தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.15–ல் உள்ள மூன்றாவது புகைப்படத்தில் உள்ளது வாதியின் வீடு என்றால் சரிதான். அந்த மூன்றாவது புகைப்படத்தில் உள்ள வீட்டிற்கு முன்புறம் உள்ள படிக்கட்டு மற்றும் தடுப்பு சுவரை கட்டியது வாதிதான் என்றால் சரிதான். வா.சா.ஆ.15–ல் உள்ள புகைப்படங்கள் 25.03.2016 தேதியில் எடுக்கப்பட்டவை என்றால் சரிதான். நான் 2 ஆம் பிரதிவாதிக்கு தாவா சொத்தினை விற்பனை செய்ததாக சொல்லும் தேதி 01.04.2016 என்றால் சரிதான்.

24. நான் தற்போது தாக்கல் செய்துள்ள எனது முதல் விசாரணை பிரமாண வாக்குமூலம் பத்தி–8–ல் வாதி உட்பிரிவிற்கு எதிராக மேல்முறையீடு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றும், வாதி வட்டாட்சியரிடம் தாக்கல் செய்த மனுவை வட்டாட்சியர் தள்ளுபடி செய்ததாகவும் கூறியுள்ளேன் என்றால் சரிதான். ஆனால் 13.02.2017 அன்று எனது பெயரில் செய்யப்பட்ட 270/6B என்ற உட்பிரிவானது ரத்து செய்யப்பட்டுவிட்டது என்றால் சரிதான், உட்பிரிவை RDO ரத்து செய்தார், அதில் வட்டாட்சியர் முறையான செயல்முறைகளை பின்பற்றவில்லை என்றும், மேல்முறையீடு தாக்கல் செய்ய அறிவுறுத்தியும் உத்தரவு பிறப்பித்திருந்தார், அதன் அடிப்படையில் நான் DRO–விடம் மேல்முறையீடு செய்துள்ளேன். நான் DRO–விடம் தாக்கல் செய்திருந்த மேல்முறையீடு 27.01.2025 தேதியில் தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது என்றால் சரிதான்.

25. DRO–விடம் தாக்கல் செய்த மேல்முறையீடு 27.01.2025 தேதியில் தள்ளுபடி செய்யப்பட்டுவிட்ட நிலையில் தற்போது 270/6B என்ற உட்பிரிவு அமுலில் இல்லை என்றால் சரியல்ல, DRO உரிமையியல் நீதிமன்றத்தை அணுகி பரிகாரம் தேடிக்கொள்ள சொல்லி உள்ளதால் உட்பிரிவு அற்றுப்போகவில்லை. நான் எந்தவித உரிமையியல் வழக்கும் தாக்கல் செய்யாததால் 270/6B என்ற உட்பிரிவு அமுலில் இல்லை என்றால் சரிதான்.

26. தற்போது என்னிடம் காட்டப்படும் நான் 2 ஆம் பிரதிவாதிக்கு கிரையப்பத்திரமான வா.சா.ஆ.11 ஆவணத்தில் எனக்கு பாத்தியப்பட்ட 20 சென்ட் பூமியில்தான் 3 சென்ட் பூமியை 2 ஆம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுப்பதாக சரத்துக்கள் இல்லை என்றால் சரிதான், ஆனால் அந்த ஆவணத்தில் சர்வே எண் 270/6–ல் எனக்கு பாத்தியப்பட்ட பட்டா நிலத்தில் 3 சென்ட்டை 2 ஆம் பிரதிவாதிக்கு கிரையம் செய்ததாக காண்பிக்கப்பட்டுள்ளது.

27. வாதி 6 சென்ட் தாவா பூமியில் 3 ½ சென்ட் பூமியில் வீடு கட்டியும், மீதி உள்ள பூமியில் ஆழ்துளை குழாய் கிணறு அமைத்தும், சுற்றுச்சுவர் கட்டியும் அனுபவத்தில் இருந்து வருகிறார் என்றால் சரியல்ல, வாதி 6 சென்ட் பூமியில் சுற்றுச்சுவர் அமைக்கவில்லை, வாதி 3.25 சென்ட்டில் வீடு கட்டியுள்ள இடத்தில்தான் சுற்றுச்சுவர் அமைத்துள்ளார். நான் எனது எதிர்வழக்குரை, முதல் விசாரணை பிரமாண வாக்குமூலம் மற்றும் ஆவணங்கள் எதிலாவது தாவா சர்வே எண்ணில் மொத்தம் 7 ½ சென்ட் பூமி உள்ளதாக கூறியுள்ளேனா என்றால் கூறவில்லை.

28. நான் வாதியின் மீதுள்ள பொறாமை காரணமாக 2 ஆம் பிரதிவாதி ஒரு ரவுடி என்பதால் எனது சுவாதீனத்தில் இல்லாத சொத்தினை பொறுத்து வா.சா.ஆ.11 கிரையப்பத்திரத்தை 2 ஆம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல, 2 ஆம் பிரதிவாதி ரவுடி அல்ல, அவர் ஒரு பொறியாளர் ஆவார், வாதியின் மீது எனக்கு எந்தவித பொறாமையும் இல்லை, வாதிக்கு வீடு கட்ட எனது நிலத்தில் நான் அனுமதி வழங்கியுள்ளேன், வாதி பட்டப்படிப்பு முடித்துவிட்டு வேலையில்லாமல் இருந்தபோது நான் அவருக்கு வேலை வாங்கி கொடுத்துள்ளேன். நான் கூறும் மேற்படி சங்கதிகள் வழக்கிற்காக நான் கூறும் பொய்யான சங்கதிகள் என்றால் சரியல்ல.

29. நானும், 2 ஆம் பிரதிவாதியும் மற்றும் ரவுடி ஆட்களுடன் சென்று வாதியின் சுவாதீனத்தை இடையூறு செய்ததால்தான் வாதி 24.03.2016 தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பை எனக்கு அனுப்பினார்

என்றால் சரியல்ல, அவ்வாறு சம்பவம் எதுவும் நடைபெறவில்லை, நான் அறிவிப்பை பெற்றுக்கொண்டதாக எனக்கு ஞாபகம் இல்லை. அந்த அறிவிப்பை பெற்றுக்கொண்ட பிறகுதான் நான் 05.05.2016 தேதியில் ஒரு பதில் அறிவிப்பை அனுப்பியுள்ளேன் என்றால் சரிதான்.

30. 01.04.2016 தேதியில் நான் 2 ஆம் பிரதிவாதிக்கு கிரையப்பத்திரம் எழுதிக்கொடுத்த பிறகு, வாதி வெளியூரில் இருந்த சமயத்தில் நானும், 2 ஆம் பிரதிவாதியும் சேர்ந்து வாதியின் சுற்றுச்சுவர் மற்றும் கிரில் கேட்டையும் உடைத்து வாதியின் பூமியை ஆக்கிரமித்து வீடு கட்டியுள்ளோம் என்றால் சரியல்ல, அவ்வாறு காம்பவுண்ட் சுவர் மற்றும் கிரில் கேட் எதுவும் அங்கு இருக்கவில்லை, நாங்கள் உடைத்தாக கூறுவது பொய்யான சங்கதியாகும்.

31. நான் எனக்கு உரிமையில்லாத சொத்தினை பொறுத்து 2 ஆம் பிரதிவாதிக்கு கிரையம் செய்து கொடுக்க எனக்கு எந்தவித உரிமையும் இல்லை என்றும், அவ்வாறு நான் 2 ஆம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரம் செல்லாது என்றும் சொன்னால் சரியல்ல, எனக்கு உரிமை உள்ளது, அது எனது பட்டா பூமி ஆகும், நான் எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரம் செல்லும்.

32. 2004 ஆம் ஆண்டிலிருந்து தாவா சொத்தான 6 சென்ட் பூமியில் வாதிதான் சுவாதீனத்தில் இருந்து வருகிறார் என்றால் சரியல்ல, அது காலி இடமாகும், அதில் ஆடு, மாடுகள் மேய்ந்து வந்தன, மக்கள் அதில் நடந்து வந்தார்கள். நானும், 2 ஆம் பிரதிவாதியும் சேர்ந்து வாதியின் பூமியை ஆக்கிரமித்து கட்டிடம் கட்டியுள்ளதால், வாதிக்கு மேற்படி பூமியில் சுவாதீனம் கிடைக்கத்தக்கது என்றும், நாங்கள் கட்டியுள்ள கட்டுமானத்தை இடித்து கொடுக்க வேண்டும் என்றும் சொன்னால் சரியல்ல, என்னுடைய பட்டா பூமியில் கட்டிடம் கட்டியுள்ள நிலையில் வாதிக்கும் அந்த பூமிக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை, அந்த கட்டிடத்தை இடிக்க கோருவதற்கு வாதிக்கு எந்தவிதமான உரிமையும் இல்லை.

33. நானும், 2 ஆம் பிரதிவாதியும் எந்தவித உரிமையும், சுவாதீனமும் இல்லாமல் ஏற்படுத்திய வா.சா.ஆ.11 கிரையப்பத்திரத்தை வைத்து வாதியின் பூமியை ஆக்கிரமிப்பு செய்துள்ளதால், அவ்வாறு ஆக்கிரமிப்பு செய்துள்ள பூமியை திரும்ப பெறுவதற்கும், அத்துமீறி கட்டப்பட்டுள்ள கட்டிடத்தை இடிப்பதற்கும் வாதிக்கு உரிமை உள்ளது என்றால் சரியல்ல, அந்த பூமிக்கும், வாதிக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை, அந்த பூமி தொடர்பாக வாதியிடம் எந்தவித ஆவணமும் இல்லை, அதனால் வாதிக்கு கட்டிடத்தை இடிக்க உரிமை இல்லை.

34. இந்த வழக்கு நிலுவையில் இருக்கும்போதே நானும், 2 ஆம் பிரதிவாதியும் வாதியின் பூமியை ஆக்கிரமித்து கட்டிடம் கட்டியுள்ளோம் என்றால் சரியல்ல. வாதியின் வழக்கு வாதி கோரியப்படி அனுமதிக்கத்தக்கது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:** இல்லை.

LOGANATHAN PRAKASH

Digitally signed by LOGANATHAN PRAKASH
Date: 2026.06.03 18:51:34 +0530